## காலில் ரத்தக்குழாய் அடைப்பா?

# பைபாஸ் அறுவை சிகிச்சை மூலம் கே.எம்.சி.எச்–சில் நிரந்தர தீர்வு

கோவை, அக். 5: மாரடைப்பு என்பது நாம் அனைவரும் பொதுவாக அறிந்த ஒன்று. அதாவது இதயத்திற்கு செல்லும் ரத்த குழாய்களில் பல்வேறு காரணங்களால் அடைப்பு ஏற்படும் போது ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு மாரடைப்பு ஏற்படுகிறது. அதே போன்று கால்களில் உள்ள ரத்த குழாய்களிலும் அடைப்பு ஏற்பட்டு கால்களை இழக்கும் அளவிற்கு பாதிப்புக்களை உருவாக்கிவிடும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.



புவனேஸ்வரன்

இதயத்திற்கு செல்லும் ரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு அதற்காக ஏன்ஜியோ பிளாஸ்டி மற்றும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்வது போன்று கால் ரத்தக்குழாய்களில் ஏற்படும் அடைப்பிற்கும் இந்த சிகிச்சைகள் செய்யப்படுகின்றது.

இது குறித்து கோவை மருத்துவமனையின் ரத்தநாளம் சார்ந்த அறுவை சிகிச்சை நிபுணர் புவனேஸ்வரன் கூறியதாவது:

பொதுவாக சர்க்கரை பாதிப்பு உள்ளவர்கள், புகைப்பழக்கம் உள்ளவர்கள், ரத்தகொதிப்பு, மாரடைப்பு பாதிப்பு ஏற்பட்டவர்கள், வயது முதிர்ந்தவர்கள் உள்ளிட்டவர்களுக்கு கால் ரத்த குழாய் அடைப்பு சார்ந்த பாதிப்புகள் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இந்த பாதிப்பு ஏற்பட்டவர்கள் சிறிது தூரம் நடப்பதற்கே மிகுந்த சிரமப்பட வேண்டி இருக்கும். அதிகப்படியான வலி இருக்கும் நடப்பதை நிறுத்திய உடன் வலி குறைந்துவிடும்.

மேலும் விரல் கருப்பாக மாறுவது, ஆறாத புண், உள்ளிட்டவைகள் இருப்பின் உடனடியாக மருத்துவர்களை சந்தித்து பரிசோதனை செய்து கொள்வது நல்லது. கால் ரத்த குழாய் அடைப்பு பாதிப்புகள் இருப்பவர்களுக்கு இதயம் சார்ந்த பிரச்னைகள் வருவதற்கும், மாரடைப்பினால் பாதிக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு கால் ரத்த குழாய் அடைப்பு வருவதற்கும் வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளது. மருந்துவர்களின் பரிந்துரையின் பேரில் அவ்வப்போது பரிசோதனைகள் செய்து கொள்வது நல்லது.

ரத்த குழாய்களில் சிறிய அடைப்புகள் இருப்பின் அதை ஆஞ்சியோ பிளாஸ்டி சிகிச்சை மூலம் அகற்றிவிட்டு அந்த இடத்தில் ரத்த குழாய்கள் சுருங்கி மீண்டும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் ஸ்டென்ட் என்று கூறப்படும் நுண்ணிய மெல்லிய குழாய் பொருத்தப்படும்.

பெரிய அடைப்புகளால் பாதிக்கப்படுபவர்களுக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்யப்படுகின்றது. இந்த பாதிப்புகளை கண்டு கொள்ளாமல் விடும் பட்சத்தில் கால்களை இழக்க வேண்டிய அபாயமும் ஏற்படுகிறது. இந்த சிகிச்சையின் மூலம் செயற்கை ரத்த குழாய்களும் தேவைப்பட்டால் பொருத்தப்படுகிறது.

இதுபோன்ற பாதிப்புகள் பற்றிய போதிய விழிப்புணர்வு பொதுமக்களிடையே இருப்பதில்லை. சிறிது தூரம் கூட வலியில்லாமல் நடக்க முடியாதவர்கள், ஆறாத புண் உடையவர்கள், விரல்கள் கருப்பு நிறமாக மாறுதல் உள்ளிட்ட தொந்தரவுகளுக்கு உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதித்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு டாக்டர் புவனேஸ்வரன் கூறினார்.

மேலும் விபரங்களுக்கு, மருத்துவர் புவனேஸ்வரனை 9442629636, 0422–4323621 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். மின் அஞ்சல்: vascularbuvanesh@gmail.com.